30.01.2026

அ.வ.எண். 54/2024

வா.சா.1 – திரு. ஈஸ்வரன், த/பெ.மந்திரியப்ப கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 30.01.2026 is accordance with the provision of Act X of 3331

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. க.ச.எண்.761 பூமியானது, 28 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது என்றும், அதை ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் அனுபவத்தில் இருப்பதாக சொல்லியுள்ள நிலையில் அது சம்பந்தமாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 கிரய பத்திரம், க.ச.எண்.761/1 காலைக்குரியது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில், க.ச.எண்.761/2 முதல் 761/7 வரையிலான சொத்து குறித்து எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில், க.ச.எண்.761/2 முதல் 761/7 வரையிலான பூமி வழியாக தடம் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணத்தில், க.ச.எண்.761/1 காலையில், ஏக்கர் 2.22 சென்ட் பூமி கிரயம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.761/1 காலையில் எங்களுக்கு ஏக்கர் 4.30 சென்ட் பூமி உள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஏக்கர் 2.22 சென்ட்டிற்கு ஆவணம் உள்ளது என்றும், மீதம் உள்ள சொத்திற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. க.ச.எண்.761/1 காலையில், உள்ள பூமிகளை வா.சா.ஆ.2 ஆவணம் மூலமாக பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சரிதான். அதில் என் சித்தப்பா (சுப்பைய கவுண்டர்), அத்தை (ஈஸ்வரி), என் அப்பா (மந்திரியப்ப கவுண்டர்) பாகம் பிரித்து கொண்டனர்.

3. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில் உள்ள, பாகப்பிரிவினை சம்மந்தப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும். க.ச.எண்.761/1 காலையில் தென்வடலாக, தடம் விட்டு கிழமேலாக சொத்தை பாகம் செய்துள்ளோம் என்றால் சரிதான். க.ச.எண்.761/1 காலையை ஒட்டி, வடபுறம் உள்ள க.ச.எண்.760 காலை பூமி எங்களுடையது என்றால் சரிதான். க.ச.எண்.760 காலையில் தென்வடலாக தடம்

விடப்பட்டுள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.760 உள்ள தடம், க.ச.எண்.761 வரை செல்கிறது என்றால் இல்லை. க.ச.எண்.760 காலையில் தென்வடல் தடம் இல்லை. வா.சா.ஆ.2 பாகப்பிரிவினை ஆவணத்தில், க.ச.எண்.761/2 முதல் 7 காலை வழியாக, தடம் செல்வதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.3 பாகப்பிரிவினை ஆவணத்தில், க.ச.எண்.761/2 முதல் 7 காலை வழியாக, தடம் செல்வதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட க.ச.எண்.761/2 முதல் 7 காலையின் முன் உரிமையாளர்கள் எங்களுக்கு உறவினர்கள் அல்ல. க.ச.எண்.761/2 முதல் 7 காலையில் வடகோட்டில் தடம் கோருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிடும்போது நான் உடன் இருந்தேன். ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் விவரம் தெரியுமா என்றால் காண்பிக்கவில்லை. க.ச.எண்.761/2 முதல் 7 காலையில் காற்றாலை அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. காற்றாலையை பராமரிப்பதற்காக வடபுறமாக ஜுப் செல்வதற்காக தடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஜுப் ரோடு பூமிக்கு நடுவில் செல்கிறது என்றால் சரிதான்.என்னிடம் காட்டப்படும் ஆவணம் நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் என்றால் சரிதான். **நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நீதிமன்ற ஆணையாளர் அவரது அறிக்கையில், வடகோட்டில் தடம் இல்லை என்றும், 40 முதல் 80 அடி தென்புறம், காற்றாலையை ஒட்டி மண் தடம் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேற்படி நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்திற்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. க.ச.எண்.760 காலைக்கு வடபுறமாக, க.ச.எண்.740 காலை உள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள க.ச.எண்.743 காலை வழியாக தடம் உள்ளது என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தோப்பு என்னுடையது என்றால் சரிதான். அது என்னுடைய

க.ச.எண்.760 ல் உள்ளது. மேற்படி தென்னந்தோப்பின் புகைப்படம் (5 எண்ணிக்கைகள்) பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. க.ச.எண்.743 காலைக்கு வடபுறமாக கிழமேல் பஞ்சாயத்து ரோடு உள்ளது. கிழமேல் பஞ்சாயத்து ரோட்டிலிருந்து தென்வடலாக எங்கள் பூமிக்கு சென்று வந்தோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்பாக க.ச.எண்.743 நம்பர் காலையில் உள்ள தடத்தை அழித்து விட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் போகவில்லை.

7. நாங்கள் 90 ஆண்டுகளுக்கு மேலாக வழக்கு சொத்தில் உள்ள தடத்தில் போய்வந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. உரிமையே இல்லாத வழக்கு சொத்து குறித்து தடபாத்தியம் கோர எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. க.ச.எண்.761/2 முதல் 7 வரையிலான காலை வழியாக தடம் உள்ளது என்பதற்கு வருவாய் துறை ஆவணங்கள் என்னிடம் இல்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் க.ச.எண்.761 காலையில் வடபுறமாக எப்போதும் தடம் இல்லை என்றும், தற்போதும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur